
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) ஈரோடு மாவட்டம்

ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம்

ஈரோடு மாநகராட்சி

ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், ஈரோடு மாநகராட்சி, ஈரோடு 'C' கிராமம், ரீ.ச.எண்.1031 / 5 & 6 -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.
(ஒப்புதல் அளிக்கப்பட்ட ஈரோடு முழுமைத்திட்டத்தில் கலப்பு குடியிருப்பு (MR-13) பகுதியில் அமைகிறது.) (திட்டப்பகுதி)

அளவு :- 1 : 400
மனுதாரர் பெயர் : R.சதாசிவம் மற்றும் T.ஜெகதீஸ்வரன்
இணையவழி விண்ணப்ப எண்: BZ4Y1NGV



வ

குறிப்பு :

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு	:	1.43 ¼ ஏக்கர் (5800.00 சமீ)
ஒதுக்கிய மனைகள்	:	23
மனைப்பிரிவின் எல்லை		.....
நிலையிலுள்ள சாலை		.....

பொது ஒதுக்கீடு

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை (தான ஆவண எண்: 92/2023, நாள்: 05.01.2023)

மனைப்பிரிவின் சாலை பரப்பு : 1810.06 ச.மீ

பூங்கா : (மனைப்பிரிவின் பரப்பு- மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) x10%
: (5800.00 - 1810.06 = 3989.94) x 10% = 398.99 ச.மீ

பூங்கா பரப்பு : 398.99 ச.மீ (10.0%) (மனுதாரரால் அரசு வழிகாட்டி மதிப்பீடு தொகை செலுத்தப்பட்டுள்ளது)

பொது உபயோகம் (A) : 40.41 ச.மீ (1.01%) .....

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

(தான ஆவண எண்: 93/2023, நாள்: 05.01.2023)

பொது உபயோகம் (B) : 43.51 ச.மீ (1.09%) .....

கட்டிட வரம்பு :
9.0மீ வரை அகலம் கொண்ட சாலைகளுக்கு 1.50 மீ விடப்படல் வேண்டும்
9.0மீ க்கு மேல் 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0 மீ விடப்படல் வேண்டும்

மூலை முடக்கு:
12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீx1.50மீ விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்

1. அரசாணை எண் 18, ந. நி (ம) கு. வ. துறை, (MA-1) நாள்: 04.02.2019, அரசாணை எண் 16, ந. நி (ம) கு. வ. துறை (MA-1) நாள்: 31.01.2020-ன்படியுள்ள மனைப்பிரிவில் அமையும் சாலைகள், பொது உபயோகம் (a) மாநகராட்சிக்கும் மற்றும் பொது உபயோகம் (b) பரப்பினை TANGEDCO ற்கும் தானமாகப்பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண் 181, வீ.வ (ம) ந.வ.துறை, நாள்: 09.12.2020-ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் (ம) தெருவிளக்குகள் ஆகியவை மாநகராட்சி விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. அரசாணை எண்-141 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.16.07.2022-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. இம்மனைப்பிரிவிற்கு மாநகராட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தில் எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும், ஆணையாளர், ஈரோடு மாநகராட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அரியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகலினை மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'x 4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.
8. உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரரால் தார் சாலை அமைக்கப்பட்டு ஆணையாளர், ஈரோடு மாநகராட்சி அவர்களிடம் தரம் குறித்து தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னர் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
9. பிரஸ்தாப மனைப்பிரிவுக்கு இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. மனுதாரின் நில உரிமத்தினை உறுதி செய்த பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
10. பிரஸ்தாப மனைப்பிரிவு அமையும் இடம் குறித்து நீதி மன்ற வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளது அறியப்பட்டின் இவ்வுத்தரவு செல்லத்தக்கதல்ல.
11. மனைப்பிரிவினை சுற்றி மனுதாரரால் சுற்றுச்சுவர்(Compound wall) அமைக்கப்பட்டிருப்பின் அதனை அகற்றி அருகிலிருக்கும் இடத்திற்கு இணைப்பு பாதை அமையும் வகையில் சுற்றுச்சுவர் இடித்து அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

SWP/DTCP/ERODE LPA/LAYOUT APPROVAL No : 61/2023
SWP/DTCP/ERODE LPA/PLANNING PERMISSION No : 09/2023

அளவர்/ உதவி வரைவாளர்	
வரைவாளர் நிலை-III	
மேற்பார்வையாளர்/ வரைவாளர் - II	

Document certified by R.Rani.
Signed by: Assistant Director
Location:Erode
Date:2023.12.20 12:12:01

உறுப்பினர் செயலர் / துணை இயக்குநர்,(பொ)
ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.